# அந்தாதி இலக்கியங்களில் புராணக் கூறுகள்

**S.கஸ்தூரி, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,**
தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி- 620001, தமிழ்நாடு, இந்தியா.
**முனைவர் ஆ.முருகானந்தம், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,**
தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி- 620001, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

இந்திய இலக்கியங்கள் சமயம் சார்ந்த கருத்துக்களைத் தொடக்கக் காலத்தில் பெரிதும் பரப்பின, புராணம் என்பது பழங்காலக் கதைகளையும், தன்வடிவமாகக் கொண்டு வளர்ந்த இலக்கிய வகையாகக் கொள்ளலாம். இறைவனின் அருட்செயல் மற்றும் பேராற்றலைப் புலப்படுத்த இவ்வகைப் புராணங்கள் வழியமைத்தன. இப்புராணங்கள், பெரும்பாலும் இறையோடு தொடர்புடைய கதைகளாக உள்ளன. புராண மரபுக்கதை என்பது மனிதனின் மற்றும் மனிதனுக்கு அப்பாற்பட்டோர்தம் அடிப்படைக் கூறுகளை உள்ளுறைக் குறியீடாகக்கொண்டு விளங்கும் கதை அல்லது கதைக்கூறுகளின் தொகுதி என்று விளக்கப்படுகிறது. நம்பமுடியாத கூறுகளடங்கிய பழங்கதைகளின் தொகுதியே புராணமரபுக் கதைகள்.

**கலைச்சொற்கள்**

| | | |
|---|---|---|
| வன்மையோன் | - | வலிமையுடையவன் |
| மீளவொண்ணா | - | திரும்பமுடியாத |
| மருப்பொசித்தல் | - | திமிரை அடக்குதல் |
| யாத்திரை | - | பயணம் |
| ஆநிரை | - | பசுக்கூட்டம் |
| சரந்துரந்தான் | - | தலைகளை இழந்தான் |
| தாளிரண்டும் | - | பாதங்கள் இரண்டும் |

**ஆய்வுத் தலைப்பு**

**“அந்தாதி இலக்கியங்களில் புராணக் கூறுகள்”** என்பது ஆய்வுத் தலைப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**சொற்பொருள் விளக்கம்**

புராணம் என்ற வடசொல் புரா-நவம் என்ற இரு வேர்களிலிருந்து பிறந்தது. புரா-ந இரண்டும் சேர்ந்து புராணம் என்றாயிற்று. இவற்றில் நிலைமொழியிலுள்ள நகரத்திற்கேற்றவாறு, வருமொழியிலுள்ள நகரம் ணகரமாக மாறிவிடும். புராணம் என்பது பழங்கதை என்னும் பொருளுடையதென்பதை ‘‘காதல் கொண்டு

கடல்வாணன் புராணம் ஓதினன்'' என்ற மணிமேகலை வரியால் உணரலாம். ''எது தொன்றுதொட்டு இன்றுவரை பரவியிருக்கிறதோ அதுவே புராணம்'' என்று வாயுபுராணம் குறிப்பிடுகிறது. தொன்மை என்ற சொல் பழமை என்ற பொருளைத் தருகிறது. பழம்பெருமையைப் போற்றிய அரசனைத் ''தொன்மை சுட்டிய வன்மையோன்'' என்று மதுரைக் கணக்காயனார் குறிப்பிடுகிறார்.

**''தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே''**

என்ற நூற்பாவிற்கு உரையெழுதிய பேராசிரியர் பழமையவாகிய கதைப்பொருளாகச் செய்யப்படுவது. அஃது பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன என்று விளக்கியுள்ளார்.[1] எனவே, பழமையான வரலாறுகள் புதுமை பெற்றிலங்கும் நிலையில் புராணம் என்ற பெயர் வழக்கில் வந்தது என்பது தெளிவாகிறது.

**அந்தாதி இலக்கியங்களில் புராணம்**

அந்தாதி இலக்கியங்களில் மிகுதியான புராணக் கதைகளின் கூறுகளைக் காணமுடிகிறது. தொடக்ககால அந்தாதிகளின் மிகுதியான கூறுகளையும் பிற்கால அந்தாதிகளில் மிகக் குறைவான கூறுகளையும் காணமுடிகிறது. அதிகமான புராணக் கூறுகளைக் கொண்ட அந்தாதிகள் முதல் மூன்று திருவந்தாதிகளும் திருவேங்கடத்தந்தாதியுமாகும். இரண்டாம் திருவந்தாதி அறுபத்தொன்பது கூறுகளையும், மூன்றாம் திருவந்தாதி என்பது கூறுகளையும் திருவேங்கடத்தந்தாதி எண்பத்தோறு கூறுகளையும் கொண்டுள்ளன.

இறைப்பண்பை இறைச்செயல்களில் வெளிப்படுத்தல் சமயத்தின் அடிப்படையில் வேரூன்றி நிற்றல், போற்றிப்புகழ் தரும் அற்புதச் செயல்களில் அமைதல், நிகழ்நிலைப் பேறெய்தி நிற்றல், கீற்றுகளாக அமைத்துச் சொல்லோவியம் படைத்தல் என்னும் வகையில் இப்புராணக்கூறுகள் வெளிப்படுகின்றன. மேலும் இறைவன் வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு காலங்களில் தோன்றும் அவதார நிலைகளில் உணர்த்தப்படுகின்றான். அந்தாதிகளில் இடம்பெறும் புராணக்கூறுகள் விளக்கப்பட்டு ஒவ்வோர் இடத்தும் அக்கதை வாயிலாகப் புலப்படுத்தப்படும் நோக்கம் வெளிப்படுத்தப்படுகிறது.

**கசேந்திரனுக்கு அருள்புரிதல்**

இப்புராண நிகழ்ச்சியில் 22 ஆசிரியர்கள் ஈடுபாடு காட்டியுள்ளனர். இருபத்தியிரண்டு அந்தாதிகளில் இப்புராணக்கூறு எழுபத்து நான்கு பாசுரங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

பிள்ளைப்பெருமான் ஐயங்கார் இந்நிகழ்வைத் தம் நூல்களில் பதினேழு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரிடத்திலும் ஒவ்வொரு கோணத்தில் இந்நிகழ்வைக் கையாளுகிறார். திருவேங்கடத்தந்தாதியின் முதல் பாசுரத்தில்

**“உருவேங்க டத்துக் குளத்தே யிருந்தன வுற்றழைக்க**
**வருவேங்கடத்துத் தும்பியஞ்சலென் றோழன – மால்கழலே”[2]**

-என்று கூறுகிறார்.

மதம்கொண்ட யானையாகிய கசேந்திராழ்வான் முதலையால் பற்றப்பட்டுத் துன்புற்று ஆதிமூலமே என்றழைக்க அதன் துன்பம் தீர்த்தும் பாதுகாத்தற் பொருட்டு, ‘‘யாம் இதோ வருகிறோம் நீ அஞ்சவேண்டா’’ என்றுரைத்தவாறு திருவைகுந்தத்திலிருந்து அவ்யானையிடத்து விரைந்த திருமாலின் திருவடிச்சிறப்பு இப்புராணக்கூற்றின் வாயிலாக எடுத்துரைக்கப்படுகிறது. எம்பெருமான் பொருள்கள் யாவற்றிலும் மறைந்திருத்தலையும், அடியார்கள் மனதில் வீற்றிருத்தலையும் குறிக்கும் வகையில் ‘‘அஞ்சலென் றோடின மால்கழல்’’ என்றுரைக்கிறார். மற்றொரு பாசுரத்தில்,

**“………… தாழ்சயத்து**
**ளாங்கடத் தாரை விளங்குமன்றோ சொல்லிற்றையமற்றே”[3]**

-என்று இப்புராணத்தை எடுத்தாள்கிறார். ‘‘ஆழ்ந்த தடாகத்தில் முதலைவாயில் அகப்பட்டுக்கொண்ட மதநீர்ப் பெருக்கையுடைய யானையும் உலக நாயகனாகிய நாராயணனை ஆதிமூலம் என்று குறிப்பிட்டு உண்மைப் பொருளை உணர்த்திற்று.

ஒரு விலங்கினால் மற்றொரு விலங்கிற்கு நேர்ந்த துன்பத்தைத் தான் இருந்த இடத்திலிருந்தே தீர்ப்பது எளிதாயினும், எம்பெருமான் அவ்வாறு செய்யாமல் நேரடியாக வந்து உதவிய தன்மையைப் பாராட்டும் வண்ணமும், எம்பெருமானை இடையறாது எண்ணுகிறவர்கட்குத் துன்பம் வருகிறபோது அவனே அத்துன்பத்தை நீக்குவான் என்ற காரணத்தால் அவனை இடையறாது சிந்திக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தவும் இப்புராணம் மிகுதியாக எடுத்தாளப்பட்டிருக்கலாம்.

**திருவடியின் சிறப்பு**

திருமாலின் திருவடிப் பெருமையைக் கூறக் கருதிய பொய்கையார் உண்மையான பக்தி ஞானத்தால் எம்பெருமானை உள்ளபடி உணரவல்லவர்கள் முன்பொரு காலத்தில் கசேந்திராழ்வரனைக் காத்தவனாகிய அப்பெருமான் திருவடிகளைக் கண்டு அனுபவிக்கப் பெறுவார்கள் என்பதை,

**“மெய்ஞ்ஞானத் தாலுணர்வரர் காண்பரே மேலொருநாள்**
**ஜகந்நாகங் காத்தான் கழல்”[4]**

என்று குறிப்பிடுகிறார். இந்திரியங்களை அடக்கியாள்பவர்களே இறைவனின் திருவடிப்பேற்றினை அடைவதற்குப் பாங்குடையோர் என்றுரைக்கிறார்.

ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

இந்திரியங்களை மதங்கொண்ட யானையாக விளக்க முற்படுகிறார். யானைகள் நீர் நிலைகளில் புகுந்தால் முதலை போன்ற உயிரினங்களால் துன்பம் நேர்வது இயற்கை, எனவே அங்கு செல்வது தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறு இந்திரியங்களை வென்று பக்தி ஞானத்தால் இறைவனை யார் உணர்கிறார்களோ, அவர்கள் இறைவனது திருவடிகளை அடையலாம் என்று குறிப்பிடுகிறார்.

**குவலயபீடத்தின் மருப்பொசித்தல்**

கம்சனால் வரவழைக்கப்பட்ட கிருஷ்ண பலராமர்கள் கம்சன் அரண்மனையை நோக்கிச் செல்கையில் அவனது அரண்மனை வாயிலில் தம்மைக் கொல்லும்படி கம்சனால் ஏவி நிறுத்தப்பட்ட மதயானை கோபித்துவர, கண்ணன் அதனை எதிர்த்து நின்று அதன் தந்தங்கள் இரண்டையும் பறித்து அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அவ்யானையைக் கொன்று விட்டு அரண்மனையின் உள்ளே சென்றான் என்பது புராணக்கதை.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இப்புராணத்தை ஐந்து இடங்களில் எடுத்தாண்டுள்ளார். திருவரங்கத்தந்தாதியில் உலகத்தின் பெரும்பான்மையான மக்களின் பேதமையைக் குறித்து இரங்கியபோது,

**“வருந்து வரைப்பட்ட வேழமட் டானை மறந்துலகோ்**
**வருந்து வரைப்பட்ட வீப்போன் மடந்தையர் மால் வலைக்கே”**[5]

என்று குறிப்பிடுகிறார். வஞ்சனையுடைய பகைவர் தன்னை நோக்கிச் செலுத்திய குவலயபீடம் என்னும் யானையைக் கொன்றவனாகிய திருமாலை மறந்து உலக மக்கள் ‘‘ஐபட்ட ஈபோல்’’ மீளவொண்ணா மகளிர்பால் கொள்ளும் மோகமாகிய வலையில் அகப்பட்டு மீளாமுடியாமல் வருந்துவர் என்கிறார்.

மதங்களைச் சொரிகின்ற குவலயபீடமென்னும் யானையின் மருப்பொடித்த பலம் பொருந்திய கையினை உடையவனே, என் அறிவின்மையை அகற்றி அறிவைத் தருவாய் திருக்கடன் மல்லையில் விலங்குகிற தேவனே என்பதை,

**“கடம்பொழிவெங் களிற்றினுயர் மருப்பொசித்த திறற்கரச்செங்**
**- கண்ணாமுதுத்**
**மடமகற்றிப் புலமருள்வாய்”**[6]

-என்று திருக்கடன் மல்லைப்பதிற்றுத் திருவந்தாதி ஆசிரியர் குறிப்பிடுகிறார். மதம்கொண்ட யானையின் மருப்பொசித்த உன்னால் இவ்வுலக மக்களிடம் படிந்திருக்கிற அறியாமையை அகற்ற முடியுமென்று இறைவனிடம் முறையிடுவதைக் காணமுடிகிறது. இறைச்சிந்தனையின்றி அலைகிறவர்கட்கு மதயானையையும், அவர்களது அறியாமைக்கு யானையின் மருப்பையும் உவமையாகக் குறிப்பிடுகிறார்.

 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

மதங்கொண்ட யானையில் மருப்பை அதனிடமிருந்து நீக்கியது போல் பெண்களின் அழகில் மயங்குகிற காம மயக்கத்திலிருந்து தன்னை விடுவிக்க வேண்டுமென்று திருக்கடல் மல்லைப் பதிற்றுப்பத்தந்தாதி ஆசிரியர்,

**"தந்த வாரள மாகன் றினைப்பொருந் தற்ப ராமட வாரெழிற்கண்டற்பு**
**தந்த ரப்படர்ந் தேயுழ லரதுநின் றாட்ச ரோகுக மூழ்த்த வருளன்"**[7]

-என்று குறிப்பிடுகிறார்.

**கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல்**

அகப்பொருள் பாசுரங்களில் இப்புராணக்கூறு மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அழகரந்தாதி மூன்று பாசுரங்களில் இப்புராணக்கூறு எடுத்தாளப்பட்டுள்ளது.

தலைவனைப் பிரிந்த தலைவி மேகத்தைத் தூதனுப்புகிறபோது, ''முன்பு கல்மழையைத் தடுப்பதற்காக உயர்ந்த சிகரத்தையுடைய கோவர்த்தன மலையை எடுத்துக் குடையாகப் பிடித்தவரிடம் என் காதலைச் சொல்லி, அவர் சொல்லும் மறுமொழியை எனக்குச் சொல்லுங்கள்'' என்று கூறுகிறாள்.

மேலும், எம்மை முன்பு ஒருகால் தடுத்திட்டாள் என்று மேகங்கள் கண்ணன் அருகில் செல்லுவதற்கு அஞ்சிடாமைப் பொருட்டு, அவர் முன்பு இடைச்சாதியில் வளர்ந்தது பற்றி, அச்சாதி தருமத்திற்கு ஏற்பப் பசுக்களைக் காக்கும் பொருட்டு அவற்றிற்கு இடையூறு செய்யத் தொடங்கிய உங்களுக்கு (மேகங்களுக்கு), எதிராக இடையூறு ஒன்றும் செய்யாது, தம்மையும் தம்மைச் சார்ந்த உயிர்களையும் பாதுகாத்த அளவோடு நின்றருளினார். ஆதலால் அது குறித்து நீங்கள் அஞ்ச வேண்டுவதில்லை என்று குறிப்பிடும் போது,

**"பண்டுகன் மழைக்காக**
**கோட்டோ திமமெடுத்தர் சோலை மாமலைக் கோவலனர்**
**மாட்டோ தீமஞ்சினங் காளுரைப் பீர்மறு வாசகமே"**[8]

-என்று கூறுகிறார். ஆநிரையைக் காப்பாற்றிய எம்பெருமான் தன் அடியவர்கட்குத் துன்பம் வருகிறபோதும் காப்பாற்றுவான் என்ற கருத்தை இப்புராணம் உணர்த்துகிறது.

**பூதனையைக் கொல்லுதல்**

கம்சன் தன்னைக் கொல்லப் பிறந்த தேவகிபுத்திரன் ஒளிந்து. வளர்தலையறிந்து, அக்குழந்தையைத் தேடியுணர்ந்து கொல்லும் பொருட்டுப் பல அசுரர்களை ஏவ அவர்களில் ஒருத்தியான பூதனை என்னும் அரக்கி, பெண் உருவத்தோடு இரவில் திருவாய்பாடிக்கு வந்து கண்ணனாகிய குழந்தையை எடுத்துத் தனது நஞ்சு பூசிய முலையைக் கொடுத்துக் கொல்ல முயல பகவானாகிய அக்குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால்

இறுகப்பிடித்துப் பாலுண்ணுகிற பாவணையில் அவளுயிரையும் உறிஞ்சி இறக்கும்படிச் செய்தான் என்பது வரலாறு. இப்புராணக் கதையின் வாயிலாகப் பூதனையின் கொடிய செயல் விளக்கப்படுவதோடு, யசோதையின் தாய்மைப்பண்பும் வெளிப்படுத்தப்படுகிறது. இறைவனின் திருக்குணங்களும் பேசப்படுகின்றன. எம்பெருமானிடத்தில் மிகவும் அன்பு பூண்டவர்களில் தலைமையானவள் யசோதை என்பதை வெளியிடக் கருதிய பொய்கையார்,

**"பேய்த்தாய் முலைதந்தாள் பேர்ந்திலளால் பேரமர்க்களால்**
**ஆய்த்தாய் முலைதந்த வாறு"**[9]

-என்று குறிப்பிடுகிறார். இதே கருத்தினை வலிமொழியும் வண்ணம்,

**"பேய்ச்சிபா லுண்ட பெருமானைப் பேர்ந்தெடுத்து**
**ஆய்ச்சி முலைகொடுத்தாள் அஞ்சாதே – வாய்த்த"**

-என்று பேயாழ்வார் குறிப்பிடுகிறார்

**இராவணனை அழித்தல்**

சீதையின் பொருட்டு இராமன் வானரப்படையுடன் சென்று இலங்கையையும், இராவணனையும் அழித்த இராமாயணச் செய்தியை அந்தாதி ஆசிரியர்கள் தம் பாசுரங்களில் பெரிதும் எடுத்தாண்டுள்ளனர். இராவணனையும் இலங்கையையும் அழித்த வரலாற்றை இரண்டாம் திருவந்தாதியில்

**"தோளிரண் டெட்டேழும் மூன்றும் முடியனைத்தும்**
**தாளிரண்டும் வீழச் சரந்துரந்தான் - தாளிரண்டும்**
**ஆர் தொழுவார் பாத மலைதொழு தன்றே என்**
**சீர்செழுதோள் செய்யுமுஞ் சிறப்பு"**[10]

-என்ற பாசுரத்தில் இராவணனை அழித்த விதம் விளக்கப்பட்டுள்ளது. இருபது தோள்களும், பத்துத் தலைகளும் இரண்டு கால்களும் முடியும்படி அம்புகள் செலுத்தப்பட்டன. எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளையும் தொழுகின்றவர்கள் எவரோ அவர்தம் திருவடிகளை நான் வணங்குவேன் என்று கூறுகிறார். இலங்கையிலுள்ள அரக்கர்கள் அழியும்படி சங்கும் ஆழியும் விட்டு அம்பையும் வில்லையும் கைகளில் கொண்டவனே, ஆசையென்று சொல்லப்படுகிற விலங்கைப்பூட்டிப் பிறப்பாகிய சிறையில் அடைக்காதே என்று திருவரங்கத்தந்தாதி ஆசிரியர் வேண்டுகோள் வைக்கிறார்.

**முடிவுரை**

மனிதனிடம் தோன்றும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைக் களைந்து, அசுர சக்திகளை வீழ்த்தி அவற்றிலிருந்து மனிதனைக் காக்கும் இறைவனின் முயற்சியையே புராணங்கள் உணர்த்துகின்றன. மனித உயிர்கட்கு மட்டுமன்றி விலங்குகட்கும், தாவரங்கட்கும் கூட இறைவன் முக்தியளித்தான் என்ற

புராணக் கதைகள் பக்தியையும் மனித வாழ்வில் தன்னம்பிக்கையையும் வளர்க்கும் நோக்கில் அமைந்துள்ளதை அந்தாதி ஆசிரியர்கள்தம் படைப்பு வழி அறியலாம்.

**அடிக்குறிப்புகள் :**

1) பேராசிரியர், (உ.ஆ) தொல்-பொருள், ப.எ-549
2) திருவேங்கடத்தந்தாதி, பா.எ-1
3) மேலது, பா.எ-31
4) முதல் திருவந்தாதி, பா.எ-47
5) திருவரங்கத்தந்தாதி, பா.எ-64
6) திருக்கடன் மல்லைப் பதிற்றுப்பத்தந்தாதி, பா.எ-8
7) மேலது, பா.எ-18
8) அழகரந்தாதி, பா.எ-63
9) முதல் திருவந்தாதி, பா.எ-34
10) இரண்டாம் திருவந்தாதி, பா.எ-43